## இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காப்புறுதி மையக் கோட்பாடுகள் (ICPs) என்பது சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கம் (IAIS) மூலம் உருவாக்கபட்டு உலகளவில் ஏற்றுக்கொள்ளபட்ட கொள்கைகளின் கட்டமைப்பாகும். காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர்களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைச் செயற்பாட்டின் தரத்தை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆனது காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) களின் சில சக மதிப்பாய்வுகளின் ஒரு பகுதியாகும். அவை காப்புறுதி | முகாமைத்துவம் கோரப்பட்ட தகவலை கணக்காய்விற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பபிடுவதற்கும் மற்றும் நாட்டில் காப்புறுதித் துறைக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான கட்டமைப்பாகப் பயன்படுத்துவதற்கும் அந்தக் கொள்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினுடைய (IAIS) உறுப்பினராக, ரூபா. 4,124,500 தரகுப் பணம் 2020 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர் கட்டணமாக செலுத்தப்பட்டு இருந்தது. ஆணைக்குழுவால் காப்புறுதி மையக் கோட்பாடுகளுக்கு இணக்கமான வழியால் கணக்காய்வுக்காக தகவல் கோரப்பட்டது. எவ்வாறாயினும், கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | மையக் கோட்பாடு (ICP) 1,2, 9, 10 ஆகும் அங்கு மதிப்பீடு பெரும்பாலும் கவனிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினால் தற்போது 25 காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) அங்கிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் காப்புறுதி தொழில் துறை பிரமாணங்கள் சட்டம் மற்றும் துணைச் சட்டம் ஆகியவற்றில் பொருத்தமான விதிகளை அமைப்பதில் அல்லது திருத்துவதில் காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) இன் மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) ஆணைக்குழு 2020 ஆம் ஆண்டு வரை அந்தந்த ஆண்டுகளுக்கான ஆணைக்குழுவின் மிகை நிதியை காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றியது. இருப்பினும், மீளாய்வாண்டில் இந்தக் கொள்கை திடீரென மாற்றப்பட்டு, ஆணைக்குழுவின் நிதியின் மிகையானது திரட்டப்பட்ட நிதியமாக முன் கொண்டு செல்லப்பட்டது. எனினும், இது தொடர்பான ஆணைக்குழுவின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிதியை முறையான கண்காணிக்காவிட்டால் இந்த நிதியை தவறாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | கணக்கியல் கொள்கைகள் அறிக்கையிடல் கட்டமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் பொருத்தமான அதிகாரத்துடன் மாற்றப்பட வேண்டும். |

## 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி 02 நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு காப்புறுதி பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது. இந்தக் காப்பீட்டிற்காக 2021 ஆம் ஆண்டில் தவணைப்பணமாக ரூபா 111,830 செலுத்தப்பட்டது. | 2021 இல் ஏற்பட்ட தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சிலர், ஆணைக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது, கோவிட்-19 ஆபத்தை குறைப்பதற்காக, தங்களுக்கு தேவையான சூழ்நிலைகளின் | சிரேஷ்ட நிர்வாகம் பொருந்தக் கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வேண்டியதுடன் ஏதேனும் விலகல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | கீழ், காப்பீட்டுத் தொகையை நீடிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். காப்பீட்டை செயற்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுவதால், ஆணைக்குழுவின் அங்கீகாரம் மற்றும் பீஎடி சுற்றறிக்கைகள் உறுப்பினர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்து மௌனமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுத் தலைவரின் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டது. தலைவர் மற்றும் மூன்று முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தவில்லை. | தேவைப்பட்டால், பொது திறைசேரியின முன் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்க ளுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2020 திசெம்பர் 10 ஆம் திகதிய PS/GPA/Circular/36/2020 ஆம் இலக்க சனாதிபதிச் செயலகச் சுற்றறிக்கை, 2019 திசெம்பர் 04 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் 2019 யூன் 17 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | மேற்கூறிய சுற்றறிக்கை 4/2019 இன் பிரிவு 2 (V) இன் படி, எந்தவொரு உத்தியோகபூர்வ/கடமை சார்ந்த பங்கேற்பு இன்றியமையாததாக இருந்தால் ஒழிய அதிகாரிகள் உள்ளூர் நிதி செலவில் கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றில் பங்கேற்கக்கூடாது. மேலும், ஏனைய சுற்றறிக்கைகள் மூலம் தேவையற்ற செலவுகளை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆணைக்குழு தனது 20 வது ஆண்டு விழாவிற்காக ரூபா 411,454 ஐ ஆணைக்குழு நிதியத்திலிருந்து செலவிட்டு 2021 மார்ச் 29 அன்று ஹோட்டலில் நடாத்தி இருந்தது.<br><br>மேலும், இந்த 20வது ஆண்டு | IRCSL இல் ஆண்டு விழா அதன் 20 வது ஆண்டில் முதன்முறையாக நடைபெற்றது. இது மற்ற ஊழியர்களை நிறுவனத்திற்கு தங்களால் இயன்ற பங்களிப்பை அளிக்க தூண்டுகிறது. முதன்முறையாக நடத்தப்படும் இத்தகைய நிறுவன நிகழ்வில் அவர்களின் பங்கேற்பு இன்றியமையாததாக இருந்ததால், இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு முழு ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும், கடிதத்தில் குறிப்பட்டுள்ளபடி இது கருத்தரங்கு/ பயிற்சிப் பட்டறைகள் அல்ல.<br>சேவைக்கான விருது என்பது ஒரு பணியாளருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வணிகத்திற்கு வழங்கிய | நிர்வாகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்க ளுக்கு இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விழாவில் 16 ஊழியர் உறுப்பின்களுக்கு ஆணைக்குழு நிதியத்திலிருந்து ரூபா 952,600 செலவிடப்பட்டு தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன. | சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு விருதை வழங்குவதாகும். ஒரு விருது ஊழியர்களுக்கு அவர்கள் நிறுவனத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்கள் என்பதைக் காட்டுகிறது மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்படாமல் போகவில்லை மற்றும் அவர்களின் சேவை பாராட்டப்படுகிறது.<br>ஊழியர்களை நிறுவனத்தில் நீண்ட காலம் இருக்க ஊக்குவிப்பதே இதன் நோக்கம். புதிய பணியாளர்களை பணியமர்த்துவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் நேரம், மன அழுத்தம் மற்றும் செலவு ஆகியவை குறிப்பிடத்தக்கவை மற்றும் ஊழியர்களின்புரள்வு நிறுவனத்தின் விளைவுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அறியப்பட்ட காரணியாகும்.<br>பெறுகை நடைமுறையைப் பின்பற்றி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஹில்டன் ஹோட்டல் ரூ. 280,000/- இற்கு நியாயமான விலையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நல்லாளுகை வழிகாட்டிகள் | வழிகாட்டியின் 9.14.2 பந்தியின்படி, தயாரிக்கப்பட்ட கையேடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும், அதன் பிறகு திறைசேரி செயலாளரின் ஒப்புதலைப் பொதுததிறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் பெற வேண்டும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட நிர்வாக கையேட்டிற்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே, தாபன சட்டத்தின் விதிகள் இது சம்பந்தமாக பொருந்தும். ஆனால் அங்கீகரிக்கப்படாத நிர்வாகக் கையேட்டின் | IRCSL இன் நிர்வாகக் கையேடு (கையேடு) நீண்ட காலத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்டது. இது முக்கியமாக இலங்கை நிர்வாகத்தின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அடிப்படையிலானது, இதில் IRCSL (அப்போது IBSL) அதே தலைமைத்துவத்தின் கீழ் இயங்கியது. IRCSL சபையின் அங்கீகாரத்துடன் தொடக்கத்திலிருந்தே இதையே பின்பற்றியது. தேவையின் அடிப்படையில், சபை / | ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட நிர்வாக கையேட்டிற்கு அந்தந்த அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அத்தகைய அங்கீகாரம் பெறப்படும் வரை, பொருந்தக்கூடிய வழிகாட்டுதலின் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் ஆணைக்குழு குறைந்தபட்சம் ரூபா 325,000 மற்றும் அதிகபட்சம் ரூபா 500,000 ஆக 2008 திசெம்பர் 31 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 14/99 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 250,000 அதிகபட்ச வரம்பைத் தாண்டி ஐந்து ஊழியர்களுக்கு இடர்க் கடனை வழங்கியிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் கூடுதலாக வழங்கப்பட்டஇடர்க் கடன் தொகை ரூபா 662,500.ஆகும். | ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் மேற்படி கையேட்டில் அவ்வப்போது மாற்றங்கள் இணைக்கப்பட்டுள்ளன.<br>நல்லாட்சிக்கான பொது நிறுவன வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்வாக கையேடு நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டதுடன் மற்றும் ஆரம்ப கையேடு 2012 ஒக்டோபர் 23 அன்று அமைச்சிற்கு அனுப்பப்பட்டது மற்றும் அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன. தொடர்ந்து, கையேட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது.<br>2018 ஏப்ரல் 05 அன்று, நிர்வாக கையேடுக்கான அங்கீகாரத்தினை வழங்குவதில், பின்பற்ற வேண்டிய நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, நடைமுறையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, பொது முயற்சிகள் திணைக்களம் ஆணைக்குழுவிற்கு தெரிவித்தது. . மேலும், கையேட்டை அங்கீகரிப்பது குறித்து பரிசீலிக்கும் வரை, கையேட்டில் உள்ள பகுதிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு பொது முயற்சிகள் திணைக்களம் கோருகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.<br>அதன்படி, IRCSL ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் அரசு விதிமுறைகள்/சுற்றறிக்கைகளை ஆணைக்குழு ஒப்பிட்டுப் பார்த்தது. இதன் விளைவாக, வசதிகள் கணிசமாக வேறுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. | விதிகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 7 ஆம் பிரிவு | கார் வாங்குவதற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டில் மூன்று ஊழியர்களுக்கும் ரூபா 1,200,000 ஆன வாகனக் கடன்கள் ஆணைக்குழ்வின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளன. | | |

அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளை ஏற்றுக்கொள்ள இயலாமை குறித்து விளக்கமளிப்பது விவேகமானது என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. கடுமையான மாற்றங்கள் IRCSL இன் சுமூகமான செயற்பாட்டிற்கு கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தும் மற்றும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக கையேட்டின்படி தொடர்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியபடி, பணியாளர்களின் ஊதியம் மற்றும் வேலைக்கான நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய முழு அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதே போன்ற நிதித்துறை கட்டுப்பாட்டாளர்கள; IRCSL இல் உள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படுவதை விட தங்கள் ஊழியர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குகிறார்கள்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 86,790,315 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 109,272,297 ஆக காணப்பட்டது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா. 22,481,982 தொகையான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டத்தில் இருந்தான வருமானம் ரூபா 12,089,251 ஆல் குறைந்தமை , மானியங்கள் ரூபா 2,905,041 ஆல் குறைந்தமை மற்றும் ஊழியர் கிரயம் ரூபா 16,374,005 ஆல் உயர்வடைந்தமை , செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 4,751,825 ஆல் உயர்வடைந்தமை இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| விபரம் | தொகை (ரூபா) 2021 | 2020 | 2019 | வேறுபாட்டின் சதவீதம் 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | | |
| மானியத்தின் அங்கீகாரம் | - | 2,905,041 | 2,324,391 | -100% | 25% | 20% |
| FSMP இருந்தான வருமானம் | 255,150 | 12,344,401 | 81,620,094 | -98% | -85% | - |
| Repo மற்றும் அழைப்புக் கணக்கு மீதான வட்டி | 6,893,783 | 479,514 | 3,698,834 | 1,338% | -87% | 9,976% |
| திறைசேரி முறி முதலீட்டின் மீதான வட்டி | - | 33,151,511 | 92,882,074 | - | -64% | -2% |
| நிலையான வைப்பின் மீதான வட்டி | 515,764,257 | 588,341,378 | 477,484,713 | -12% | 23% | 33% |
| **செலவீனங்கள்** | | | | | | |
| ஊழியர் செலவுகள் | 127,134,065 | 109,096,963 | 112,323,915 | 17% | -3% | 42% |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் - இருக்கைப் படி | 1,384,859 | 865,972 | 540,000 | 60% | 60% | 2% |
| ஊழியர் நலன்புரி | 4,459,324 | 2,038,778 | 841,693 | 119% | 142% | -28% |
| ஊழியர் மருத்துவக் காப்புறுதி | 2,328,894 | 2,001,327 | 1,615,932 | 16% | 24% | 45% |
| உள்நாட்டு ஊழியர் பயிற்சி மற்றும் சந்தாப்பணம் | 921,188 | 401,492 | 1,610,639 | 129% | -75% | 27% |
| விடுமுறைக் கொடுப்பனவு | 1,796,425 | 1,673,310 | 1,218,344 | 7% | 37% | 77% |
| அச்சுப்பிரதி மற்றும் எழுதுபொருட்கள் | 2,764,004 | 2,413,783 | 3,406,080 | 15% | -29% | 106% |
| பொது விழிப்புணர்வு | 1,814,843 | 1,459,568 | 9,834,508 | 24% | -85% | 309% |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு EDP மற்றும் ஏனையவை | 2,103,839 | 3,298,073 | 2,107,863 | -36% | 56% | 21% |
| பணிப்பாளரின் வாகன கொடுப்பனவு | 4,570,890 | 3,166,986 | 3,246,712 | 44% | -2% | 4% |
| பணிப்பாளரின் எரிபொருள் கொடுப்பனவு | 1,356,590 | 1,030,514 | 1,066,755 | 32% | -3% | 6% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

ஆணைக்குழு மற்றும் தொழில்த்துறைக்காக கடந்த ஐந்து வருடங்களுக்காகக் கணக்கிடப்பட்ட முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| **ஆணைக்குழு** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் (PPF) வளர்ச்சி | 12% | 19% | 24% | 23% | 25% |
| வருடாந்த செஸ் வருமானத்தின் வளர்ச்சி | 7% | 3% | 3% | 15% | 2% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக செஸ் வருமானம் | 0.23% | 0.24% | 0.25% | 0.26% | 0.29% |
| வருடாந்த கட்டண வருமானத்தின் வளர்ச்சி | 5% | 3% | 33% | 19% | 13% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக | 0.11% | 0.12% | 0.11% | 0.09% | 0.09% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டண வருமானம் | | | | | |
| **தொழில்த் துறை** | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைப்பணம் | 1.38% | 1.39% | 1.27% | 1.24% | 1.19% |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூபா.பில்லியன் | 879.8 | 789.7 | 689.6 | 606.6 | 564.9 |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி | 11% | 15% | 14% | 7% | 8% |
| நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக காப்புறுதித் துறையின் சொத்துக்கள் | 3.29% | 3.37% | 3.44% | 3.32% | 3.31% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வெளியார் கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் பொருளாதார இடமொன்றைத் தேடாமல் கட்டிடத்தின் குத்தகை வாடகையாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 48,109,101 செலுத்தப்பட்டது. | ஆணைக்குழு அதன் 224 ஆம் கூட்டத்தில், 2024 செப்டம்பர் இல் தற்போதைய குத்தகைக் காலம் முடியும் வரை ஓவர்சீஸ் ரியல்ட்டி (சிலோன்) பீஎல்சீ சலுகையை ஏற்க முடிவு செய்தது. இருப்பினும், இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், அதற்கான சொந்த இடத்தை வாங்குவதற்கான சாத்தியக்கூறுகளைப் பார்ப்பதற்கு நிர்வாகத்திடம் கோரப்பட்டுள்ளது. . | ஆணைக்குழு அவர்களின் செயற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்ற பொருளாதார இடமொன்றைத் தேட வேண்டும். |
| (ஆ) | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்பீட்டுத் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் பங்கை நிறைவேற்றுவதில் பொதுமக்களுடன் நெருக்கமாகக் கையாள்வதற்கான ஒரு நிறுவனமாக இருக்க வேண்டும். இருப்பினும், அதன் தற்போதைய இடம், கலாச்சாரம் மற்றும் நுழைவு கதவுகள் கடுமையான பாதுகாப்பு நிலைமைகளின் கீழ் இருப்பதால், பாதிக்கப்படக்கூடிய பொது மக்களுக்கு அவற்றை அணுகுவது கடினம். மேலும், ஆணைக்குழு வளாகத்திற்குள் நுழைவதற்கு பொதுமக்களுக்கு உதவ முன் | IRCSL இணையதளத்தின் உள்ளடக்கங்களை ஆங்கிலத்தில் இருந்து சிங்களம் மற்றும் தமிழுக்கு மொழிபெயர்ப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே உள்ளன. மேலும், IRCSL இன் அதிகாரிகள் பொது மக்களுக்கு கடிதங்கள், தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும்போது அல்லது உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக அலுவலகத்திற்குச் செல்லும் போது அவர்களுக்கு வசதியான மொழியில் (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) சேவை செய்கிறார்கள். பாதிக்கப்படக்கூடிய குழுவைச் சென்றடையவும் சேவைகளைப் பெறுதல் உட்பட IRCSL ஆனது அனைத்து வசதிகளையும் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது, | தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்கு ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தில் எந்த அதிகாரியும் இல்லாததை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது. மேலும், இணையதளத்தில் அனைத்து தகவல்களும் ஆங்கிலத்தில் மட்டுமே இடம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிந்தது | | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான செலவு-பயன் பகுப்பாய்வு இல்லாமல 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் ரூபா 1,013,000 மென்பொருளுக்கும் மற்றும் ரூபா 923,000 வருடாந்த சந்தாவிற்கும் செலவிடப்பட்டு சபைக் கூட்டத் தீர்வொன்று கொள்வனவு செய்யப்பட்டது. கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவு பகுப்பாய்வின்படி, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 01 சபைக் கூட்டத்திற்கான மென்பொருளிற்கான செலவு ரூபா 63,533 ஆகும்.எனவே, ஆணைக்குழுவுக்கு இது செலவு குறைந்த கூட்டத் தீர்வொன்றா என்பது கேள்விக்குறியாக உள்ளது. | சபைக் கூட்ட முகாமைத்துவ தீர்மானம் குறிப்பாக பின்வரும் நன்மைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.<br>• விரைவான அணுகல்<br>• கருத்துகளை அணுகுவதற்கும் பகிர்வதற்கும் ஆதரவு<br>• தொலைநிலை அணுகல்<br>• வாரிய உறுப்பினர் ஈடுபாட்டை அதிகரிக்கவும்<br>• முந்தைய சந்திப்பு பதிவுகள் போன்றவற்றிற்கான விரைவான அணுகல்.<br><br>எவ்வாறாயினும், ஒரு கூட்டத்திற்கான மென்பொருளிற்கான செலவுக் கணிப்பீடாகக் கருதப்படுகின்ற ரூபா 2,859,000 செலவானது ரூபா 38,120. எனத் திருத்தப்பட வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். சபைக் கூட்டத்திற்கான முகாமைத்துவ தீர்வானது, அதிக எண்ணிக்கையிலான தாள்கள், டோனர், காகிதங்களை புகைப்படம் எடுப்பதற்கான நேர ஈடுபாடு, நிகழ்ச்சி நிரலை வழங்குதல் போன்றவற்றைப் பயன்படுத்தும் கூட்ட நிகழ்ச்சி நிரலை அச்சிடுவதற்கான செலவுகள் போன்றவற்றைக் குறைப்பதற்கு IRCSL ஆல் முடிந்தது.<br>மேலும், சபை பத்திரங்கள் மற்றும் சபை முடிவுகளின் முழுமையான கணினி தானாக காப்பகப்படுத்தல் நடைபெறுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்த வகையான தீர்வு மற்ற அரசு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. அதன்படி, செலவுடன் ஒப்பிடும் போது IRCSL தீர்விலிருந்து அதிகபட்ச பலனைப் | ஆணைக்குழுவிற்கான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கு முன் சரியான செலவு பயன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து ஆலோசனை பெறப்பட வேண்டும். |

பெறறுக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு சபைக் கூட்டத்திற்காக இந்த தீர்வின் மூலம் சபை பத்திரங்களைத் தொடர்புகொள்வதற்கான சராசரி செலவு ரூபா 92,995 ஆகும். எனவே, இந்த தீர்வு செலவு குறைந்த முறையா என்பது சந்தேகமாக உள்ளது. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | |

## 3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தங்கள் ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை ஆணைக்குழு எடுக்கவில்லை. மேலும் ஊழியர்களின் பங்களிப்பு இல்லாமல் காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்காக 2021 ஆம் ஆண்டிற்கான அவர்களின் நிதியான ரூபா 6.2 மில்லியனை ஆணைக்குழு செலவிட்டிருந்தது இருப்பினும், 2017 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அரை அரசுத் துறை ஊழியர்களுக்கான அக்ரஹார காப்பீட்டுத் திட்டத்தை நீட்டித்து, ஒவ்வொரு ஊழியருக்கும் மாதம் ரூபா 1000 பங்களிப்பாக வசூலித்திருந்தது. | ஆணைக்குழுவின் தொடக்கத்திலிருந்தே, IRCSL ஊழியர்களுக்கான காப்பீட்டுத் தொகைகளை வழங்கியுள்ளது. இது பணியாளர் ஊதிய தொகுப்பின் ஒரு பகுதியாகும். அனைத்து நிகழ்வுகளிலும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.பீஈடீ 6/2019 இல், நிறுவனங்களுக்கு இந்தச் சேவைகளைப் பெறுவதற்கான வசதி மற்றும் சேவையின் தரம், இதில் உள்ள செலவு, ஈடுசெய்யப்பட வேண்டிய ஆபத்தின் தன்மை போன்றவற்றைக் கருத்தில் கொள்ளுமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. 2019 செப்டம்பர் 12ஆம் திகதிய , அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 06/2019 (i) இல் (பக்கம் 51) குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கு இணங்க, DPC சந்தைப் பங்கின் அடிப்படையில் முதல் 5 நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் IRCSL இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான காப்புறுதி கம்பனிகளிடமிருந்தும் கூறுவிலைகளை அழைப்பதற்கு முடிவு செய்திருந்தது. NITF கூறுவிலைகளை இணைக்கவில்லை. நீண்ட காலமாக IRCSL ஊழியர்களுக்கு சுகாதார காப்பீடு வழங்குனரான SLIC ஆனது, ஸ்பாட் க்ளெய்ம் செட்டில்மென்ட் சேவை, கோவிட் 19 க்கான விரிவான | ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | பாதுகாப்பு உள்ளிட்ட தரமான சேவையை வழங்கி வருகிறது. மேலும், முந்தைய அனுபவத்தின்படி, மோட்டார் மற்றும் தனிப்பட்ட விபத்துக் காப்பீடு போன்ற கோரிக்கைகள் தொடர்பாக NITF திருப்திகரமான சேவையை வழங்கவில்லை. மேலும், அக்ரஹார காப்பீட்டு திட்டத்திற்கு திறைசேரியின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. எனவே, அது பொருத்தமாக இருக்காது. | |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வு ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை திட்டங்களுடனான ஒரு உள்ளக கணக்காய்வு வேலைத் திட்டம் பெறப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், ஆலோசர்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டு கட்டத்தில் ஒரு வேலைத் திட்டம் மீண்டும் அழைக்கப்பட்டது. | அனைத்து முன்மொழிவாளர்களும் முன்மொழிவுடனான கணக்காய்வு வேலைத் திட்டத்தை சமர்ப்பிக்க கோரப்பட்டனர். M/s Barker Tilly இனால் அவர்களின் முன்மொழிவினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் நடைமுறை மற்றும் வேலைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி தாங்களின் தகவலுக்காக இணைக்கப்பட்டுள்ளது. | பெறுகையை முன்கூட்டியே திட்டமிடவும் தேவையான அனைத்து தகவல்களையும் கேள்விமனுவுடன் அழைக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு சேவையின் பெறுகைக்கான பெறுகைகள் குழுவின் அறிக்கைக்கமைய 2019 திசெம்பர் 18 ஆந் திகதி விலைக்கேள்வி திறக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், விலைக்கேள்வி மதிப்பீடு 2021 யூன் 16 ஆந் திகதியே இடம்பெற்றிருந்தது. பெறுகைகள் வழிகாட்டியின் 8.4.1 ஆம் பிரிவிற்கமைய, தேவையான அனைத்து அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ள போதிய காலத்தினை சேமிக்கக்கூடிய வகையில் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், விலைக்கேள்வி திறக்கும் திகதியின் பின்னர் ஆறு மாத காலம் கடந்தே முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை | கொவிட் 19 தொற்றுநோய் பரவல் காரணமாக பெருமளவான அலுவலக நடவடிக்கைகள் வீட்டிலிருந்தே பணிபுரியும் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. அதனால், பெறுகை நடைமுறையில் பொதுவான நிலைமையின் கீழ் மிக நீண்ட காலம் கடந்திருந்தது. | முகாமைத்துவத்தினால் பெறுகைகள் கால அட்டவணை பின்பற்றப்பற வேண்டியதுடன், திட்டமிடப்பட்ட கால அட்டவணையினுள் பெறுகை நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | பெறுகை வழிகாட்டியின் பிரிவு 6.5.9 இன் படி, முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP's) அழைப்பதற்கு முன் மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் துணை அளவுகோல்கள் தீர்மானிக்கப்படும். விலைக்கேள்வி திறக்கப்பட்ட பின்னர் உள்ளக கணக்காய்வாளரை தெரிவு செய்வதற்காக சிறு பட்டியலிடல் மற்றும் மதிப்பீட்டு அளவுகோல்களுடனான புள்ளியிடும் முன்மொழிவு முறைமை வரைவிலக்கணப்படுத்தப்பட் டுள்ளது. அந்த அளவுகோல்கள் 2020 யூன் 16 ஆந் திகதி பெறுகைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. | குறிப்பு விதிமுறைகளின் கீழ் (TOR), மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் புள்ளி அமைப்பு தெளிவாகக் குறிப்பிடப்பட்டு ஆலோசகர்களுக்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) அனுப்பும் நேரத்தில் ஆலோசகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தகவலுக்காக ஒரு நகல் இணைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. | பெறுகை நடவடிக்கைகளுக்காக முன் வரையறுக்கப்பட்ட அளவுகோல்களை தீர்மானிப்பதன் மூலம் ஆணைக்குழுவின் பெறுகை நடவடிக்கைகளை சரியாகத் திட்டமிட வேண்டும். |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டியின் 1.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், பெறுகை நடைமுறையானது உச்ச பொருளாதார நலன், கால அடிப்படை மற்றும் பெறுகையின் தரத்தினை சான்றுபடுத்த வேண்டியதுடன், அதன் பெறுபேறாக அதிக தரம் மற்றும் குறைவான கிரயத்தினை பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறான போதிலும், ஆணைக்குழுவினால் சபைக் கூட்ட முகாமைத்துவ தீர்வினை கொள்வனவு செய்வதற்காக கிரய, நலன் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திறனான சபைக் கூட்ட முகாமைத்துவ தீர்வொன்று காணப்பட வேண்டியதன் தேவைப்பாடு ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தீர்வின் விசேடத்துவங்கள், சேவை பெறுநர் மற்றும் நிர்வாக பிரவேசம், பாதுகாப்பு விஷேடத்துவங்கள் மற்றும் சான்றுறுதிப்படுத்தல் விலைகளின் அடிப்படையிலான சபைக் கூட்ட முகாமைத்துவ தீர்விற்கான பெறுகை ஆகும். அதற்கமைய கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை திட்டமிடல் கட்டத்தில் முறையான கிரய நலன் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.5 வழிகாட்டியின் பிரகாரம் வரிசை அமைச்சின் செயலாளரால் DPC நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், பெறுகைகள் வழிகாட்டிக்கமைய அவ்வாறான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலான சான்றுகள் | 2019 ஆம் ஆண்டுக்காக வரிசை அமைச்சினால் DPC நியமிக்கப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கமைய பெறுகைகள் குழு நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.1(ஈ) இன் பிரகாரம், அவ்வாறான அனைத்து பதிவேடுகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழுவினால் முறையாக பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், அந்த பதிவேடுகளின் உள்ளடக்கத்திற்கான மொத்த பொறுப்பும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், கணக்காய்வுக்கு கிடைத்துள்ள தகவல்களுக்கமைய, விலைக்கேள்வி திறக்கப்பட்ட பின்னர் மாகாண சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டுள்ளமையால், பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் விலைக்கேள்வி ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அனைத்து விலைக்கேள்வி ஆவணங்களும் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. | சொலுயுஷன் (மென்பொருள்) பெறுகைக்குரிய ஆவணங்கள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு முன்னர் தலைவர் (விடய நிபுணர்) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் மற்றுமொரு அங்கத்தவர் மற்றும் திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவர் ஆகியோரால் பரிசோதிக்கப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் சபை கூட்ட முகாமைத்துவ தீர்வாக BoardPAC மற்றும் Octoplex இற்காக விலைக்கேள்வி வழங்கப்பட்டு 2 கூறுவிலைகள் கிடைத்துள்ளன. மென்பொருள்தொடர்பான பெறுகைகள் தீர்மானம் 192 ஆம் கூட்டத்தில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், பணிப்பாளர் சபை கூட்ட முகாமைத்துவ தீர்வுக்கான வன்பொருள் பெறுகைக்குரிய விலைக்கேள்வியானது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் வழங்கப்பட்ட அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்க திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவரினால் கோரப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், நாம் தற்போது நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்தியுள்ளதுடன், விலைக்கேள்வி அழைப்பிற்கு முன்னர் பெறுகைகள் ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மற்றும் திணைக்கள பெறுகைகள் குழுவினால் மீளாய்வு செய்யப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (எ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி அழைப்பில் முக்கியமான தகைமை | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விலைக்கேள்வி ஆவணங்களில் பெறுகைக்குரிய முக்கியமமான அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | அளவுகோல்கள் மற்றும் வெற்றிகரமான விலைக்கேள்வியாளரின் தகைமைத் தேவைப்பாடுகள் உள்ளடங்களாக விலைக்கேள்வி அல்லது கூறு விலைகளை தயாரிப்பதற்கு எதிர்பார்த்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கு தேவையான தகைமையான மற்றும் உரிய அடிப்படைத் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், ஒட்டுமொத்த பயனர்களின் எண்ணிக்கை, உற்பத்தி சிறப்பியல்புகள், உள்ளீட்டு கட்டிட நிர்மாணவியல், சேவை பெறுநர் மற்றும் நிர்வாக நுழைவு, பாதுகாப்பு சிறப்பம்சங்கள், மெய்மையாய்வு, சேவை வழங்குநர் அடிப்படை மற்றும் க்ளவுட் இயலளவு போன்ற பொதுவான தகவல்கள் விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஏ) | பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 (உ) வழழிகாட்டிக்கமைய பிரதான பெறுகைகள் திட்டம் ஆறு மாதத்திற்கு விஞ்சாத கால இடைவெளிகளில் நாள்தோறும் நாளதுவரையாக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், ipads மற்றும் அதனுடன் தொடர்புடைய உதிர்ப்பாகங்கள் பெறுகைகள் திட்டத்திலோ பாதீட்டிலோ உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பெறுகைகள் திட்டத்திற்கு வன்பொருட்கள் மற்றும் மென்பொருள் ஆகிய இரு பிரிவுகளும் உள்ளடங்களின சபை கூட்ட முகாமைத்துவ தீர்வு உள்ளடக்கப்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டியின் தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆணைக்குழுவின் பெறுகைகள் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்ட நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் (FSMP) ஒப்பந்தத்தின் படி, திட்ட அமுலாக்கம் முழுவதும் செயல்படுத்தும் நிறுவனம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு (IDA) ஆண்டு வேலைத்திட்டம் மற்றும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 30 | ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 க்கு பிந்தாத வகையில் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகிற்கு (CPCU) அனுப்பப்பட்டு இருந்தது. வரவு செலவுத் திட்டத்துடன் நடந்து கொண்டிருக்கும் பெறுகைகள் | பெறுகைகளில் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அணுகலை அல்லது கணக்காய்வுக்கு கிடைக்கக்கூடியதான தொடர்புடைய தகவல்களை ஆணைக்குழுவிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதிக்குப் பிந்தாத ஒப்புதலுக்கான ஒவ்வொரு அடுத்த நிதி ஆண்டின் திட்டத்தின் கூறு 2(c) இன் கீழ் நடவக்கைகளுக்கான வரவு செலவுத் திட்டத்தையும் வழங்க வேண்டும். எவ்வாறாயினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த வேலைத் திட்டங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், அந்த ஆவணங்கள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதா என்ற தகவல் கிடைக்கவில்லை. | தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் பெறுகைகளின் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தன. | வழங்க வேண்டும். |
| (ஆ) | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியக் காப்புறுதி மற்றும் இத் திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான மீள் காப்புறுதி வணிகம் ஆகியவற்றின் பாகுபாட்டிற்கான தொகையாக 945,450 அமெரிக்க டொலர் (SDR. 0.67 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது.<br>எவ்வாறாயினும், இந்தப் பணம் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | உலக வங்கிக்கு இடையில் நடைபெற்ற திட்ட மீளாய்வுக் கூட்டங்களில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத் தலைவராக தொடங்குவதற்காக கடிதம் குறிப்பிட்டது,<br>தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை, அதன் காப்புறுதி மற்றும் மீள் காப்புறுதி வணிகங்களை பிரிக்க வேண்டாம் என்று முடிவு செய்து உள்ளதாகவும் எனவே அவர்கள் உலக வங்கியிடம் இருந்து தொழிநுட்ப உதவியை நாட விரும்பவில்லை என்றும் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகு (CPCU) குறிப்பிட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு பிரிப்பதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் முன்மொழிவை சமர்ப்பித்தவுடன் DLI க்கு தொடங்கப்பட்டு இருப்பது தொடர்பில் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு பொறுப்பாகும்.<br>தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முன்மொழிவை சமர்ப்பித்து இருந்தால், இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு முன்மொழிவை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கும் மற்றும் DLI | செயற்திட்டம் வெற்றி பெற ஆணைக்குழு சரியான ஒருங்கிணைப்பு மற்றும் செல்வாக்கு மிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடையப்படுவதற்கான எந்த ஆட்சேபனையும் வழங்கவில்லை. எவ்வாறாயினும், இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு தனது பங்கைச் செய்வதற்கான பிரிவினைக்கான முன்மொழிவை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சமர்ப்பிக்கவில்லை. பிரிவினையை கைவிடும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முடிவை உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம். எவ்வாறான போதிலும், தற்போது அந்த செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | மேற்பார்வையை வலுப் படுத்துவதற்கான விரிவான வேலைத் திட்டம் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் உடைய ஒழுங்குமுறை திறன் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 க்கு பிந்தாத வகையில் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகிற்கு (CPCU) அனுப்பப்பட்டு இருந்தது. வரவு செலவுத் திட்டத்துடன் நடந்து கொண்டிருக்கும் பெறுகைகள் தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் பெறுகைகளில் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தன. | முகாமைத்துவம் கணக்காய்வினால் கோரப்பட்ட தகவல்களை வழங்க வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்திற்கான ஆலோசகர்கள் அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதையும் மற்றும் திட்டத்தின் பொதுவான நோக்கங்களை அடைவதற்கு அந்த ஆலோசகர்களிடையே வலுவான பரஸ்பர உறவு எதுவும் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இந்த பலவீனமான செயற்திட்ட முகாமைத்துவத்தின் காரணமாக எதிர்பார்த்த செயற்திட்ட நோக்கங்கள் மற்றும் முடிவுகள் | ஒப்பந்தத்தின் / பெறுகைகள் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு மதியுரை சேவைக்காக வருமானத்தின் ஒரு பகுதியை ஈடுபடுத்த உத்தேசித்தது. மதியுரை சேவைகளாவன:<br>I. மதிப்பீட்டு நிபுணத்துவம்<br>II. காப்புறுதி நிபுணத்துவம்<br>III. தகவல் தொழிநுட்ப நிபுணத்துவம் | ஆலோசகர்கள் இடையே சரியான ஒருங்கிணைப்புக்காகவும் மற்றும் திட்ட வெற்றியைப் பெற பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவும் திட்ட முகாமைத்துவக் குழு வசதி அளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எட்டப்பட்டு இருக்கவில்லை. | IV. மனித வள நிபுணத்துவம்<br>V. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கண்காணிப்பு சட்டகத்தினை நவீனமயப்படுத்துவதற்கான மதியுரை கம்பனி<br><br>செயல்பாட்டின் தன்மைக்கு ஏற்ப பெறுகை நிறுவனங்களுடன் ஓரளவு இடைத்தொடர்பு காணப்பட்டது. மேற்குறித்த மதியுரை நிறுவனங்களின் குறிப்பு விதிமுறைகள் (TOR) மூலம் நோக்கத்தினை அடையும் திட்டம் புலப்படுத்தப்படுகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 2 மதியுரை நிறுவனங்களை வாடகைக்கு எடுக்க முடியுமானதாக இருந்த போதிலும், பெறுகை நடைமுறையில் ஏற்பட்ட சிற்சில தடைகள் காரணமாக எஞ்சிய 3 மதியுரைகளை கையளிக்க முடியாதிருந்தது. | |
| (உ) | 2022 மார்ச் 29 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் செயற்பாட்டிலுள்ள மதியுரையாளர் அவரின் ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியுள்ளார். ‘‘இதுவரையிலுமான காப்புறுதி (செயற்பாட்டிலுள்ள) செயற்திட்டம் தொடர்பில் மதியுரையாளரின் மதிப்பீடு’’ என பெயரிடப்பட்டுள்ள அறிக்கைக்கமைய 2022 சனரி 24 ஆந் திகதியில் உள்ளபடியாக செயற்பாட்டிலுள்ள மதியுரையாளரால் முகாமைத்துவத்தினால் அவரின் பரிந்துரைகளுக்காக கருத்து தெரிவிக்கப்படாமை, செயல்நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்க மற்றும் பின்தொடர் மேற்கொள்ள ஆணைக்குழுவினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராமை, அலகுகளின் தலைவர்கள் அவர்களின் முன்மொழிவுகளுக்கு நியாயமான | விருப்பத்தை தெரிவிக்கும் கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் குறிப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இனைத்து பணிகளையும் நிறைவேற்றுவதற்கு இணங்கி மதியுரையாளர் தமது முன்மொழிவினை சமர்ப்பித்திருந்ததார். எவ்வாறான போதிலும், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பல்வேறு காரணங்களை குறிப்பிட்டு சில பணிகளை நிறைவேற்ற அவர் இணங்கியிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை மதியுரையாளரால் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் நாம் அது தொடர்பில் பதில் வழங்கவில்லை. அதனைப் போன்றே அந்த நேரத்தில் அவருக்கு மதிப்பீட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் | ஆணைக்குழு செயற்பாட்டிலுள்ள மதியுரையாளருடன் உடன்படிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன், இணங்கிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது ஒப்பந்தத்தின் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

விவாதங்களின் மூலம் பதில் வழங்காமை, போன்ற நடவடிக்கைகள் எதுவித ஒத்துழைப்புமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பததற்கு தேவையான காப்புறுதி நிபுணர்களிடமிருந்து, காப்புறுதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை வழங்குவதற்கு ஆணைக்குழு கடப்பட்டுள்ள போதிலும், ஆணைக்குழுவினால் உரிய தெளிவுபடுத்தல் வழங்கப்படாது அவரின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளாது கவனத்திற் கொள்ளப்படாது விடப்பட்டுள்ளது. மேற்படி அவதானிப்புகளின் அடிப்படையில் மதியுரை செயற்பாட்டுக்காக ஐ.அ.டொ. 168,000 செலுத்தப்பட்டமை சிக்கனமற்றது என்பது அவதானிக்கப்பட்டது.

தேவைப்பாடு காணப்படவில்லை. அவர் திறைசேரியின் செயலாளர் மற்றும் சனாதிபதி செயலாளருக்கு முறைப்பாடு செய்திருந்ததுடன், அவரின் அறிக்கையின் பிரதியொன்றை நிதி அமைச்சின் ஊடாக பெற்றுக்கொண்டோம். இந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் ஆணைக்குழு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலதிக மீளாய்வுக்காக கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவரின் நியாயமற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் கணக்காய்வுக் குழு மட்டத்தில் விரிவான கலந்துரையாடல்கள் அனைத்து உயர் முகாமைத்துவ மட்டத்தினாலும் மேற்கொள்ளப்பட்டன. நட்டஈடாக அவர் வழங்கிய சில அறிக்கைகளுக்கு விகிதாசாரக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு கணக்காய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்க முடியாது. மேலும், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அவரின் அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது விடவில்லை. உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு அவருக்கு பல துறைகள் தொடர்பான ஆலோசனைப் பத்திரங்கள் வழங்க வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அது சமர்ப்பிக்கப்படவில்லை. அவர் காப்புறுதி நிபுணர் ஒருவரின் பணியை நிறைவேற்றுவதற்கு தகைமை உள்ளதாக கூறி வாதிட்டு காப்புறுதி நிபுணர் ஒருவர் இல்லாது மேற்கொள்வதற்காக மேலதிக கட்டணமொன்றை கோரியிருந்தனர். எவ்வாறான போதிலும், அவரின் கோரிக்கையுடன் இணங்க முடியாது. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கமைய

இலங்கைக்கு ஒரு தடவையேனும் வருகைதருவதற்கு அவர் தவறியிருந்தார். அவர் தமது வீசா அனுமதிப்பத்திரம் தொடர்பில் வாதிட்டு காலம் மற்றும் வளங்களை விரயம் செய்திருந்தார். அஅவரின் பெரும்பாலான அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்க முன்னர் கலந்துரையாடுவதற்கு மேலும் பல விடயங்கள் காணப்பட்டன. எனினும், சில அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கூறு 15(ஆ) என்பது தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழான பணிகளாவதுடன், அதன் செயற்பாட்டு மதியுரையாளருக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு துணை சேவைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க நேர்ந்தது. ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டை மீறிய விடயங்களால் தகவல் தொழில்நுட்ப பெறுகைளை கையளிக்க முடியாது. அதன் காரணமாக செயற்பாட்டிலுள்ள மதியுரையாளருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளல் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக கருத முடியாது. அறிக்கை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு சொந்தமான சொத்தொன்றாவதுடன், அனைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளின் ஆலோசனைகளும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் செயற்பாட்டாளர் ஒருவரை வாடகைக்கு எடுக்கும் போது பயன்படுத்தப்படும். தற்போதுள்ள ஆணைக்குழுவும் செயற்பாட்டாளர் ஒருவரை ஆட்சேர்ப்பததற்க நேரடியாக தலையிட்டுள்ள போதிலும், குறைந்த சம்பளக் கட்டமைப்பு காரணமாக அது

| | | | |
|---|---|---|---|
| | | வெற்றியடைந்திருக்கவில்லை என்பது தனியானதொரு வாதமாகும். | |
| (ஊ) | கணக்காய்வுக்காக நிலவும் தகவல்களுக்கமைய செயற்பாட்டிலுள்ள மதியுரையாளரால் வழங்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின் பிரகாரம், எந்தவொரு அறிக்கையும் வெளியிடப்பட்டோ அல்லது 3 கூறுகளுக்காக பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால், 17 கூறுகளில் 14 கூறுகளுக்காக வரைபு மற்றும் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வுக்கான தகவல்களுக்கமைய அந்த அறிக்கைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அந்த அறிக்கைகள் கண்காணிப்பாளராக கருத்து தெரிவிப்பதற்கு, அபிவிருத்தி செய்வததற்க மற்றும் கொள்கை உருவாக்கல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருடன் அந்த அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டமைக்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டிலுள்ள மதியுரையாளரிடமிருந்து இணங்கிய பணிகளை செய்விப்பதற்கு ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (எ) | பணித் திட்டத்தின் பிரகாரம், செயற்பாட்டு மதியுரையாளரின் பணியானது காப்புறுதி மதியுரையாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் போன்ற ஏனைய மதியுரையாளர்களுடன் தொடர்புபட்டிருந்தது. அதனால், அந்த மதியுரையாளர்களிடையே இணைப்பினை மேற்கொள்ள ஆணைக்குழு அவர்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தமை எம்மால் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தின் / பெறுகைகள் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு மதியுரை சேவைக்காக வருமானத்தின் ஒரு பகுதியை ஈடுபடுத்த உத்தேசித்தது. மதியுரை சேவைகளாவன:<br>I. மதிப்பீட்டு நிபுணத்துவம்<br>II. காப்புறுதி நிபுணத்துவம்<br>III. தகவல் தொழிநுட்ப நிபுணத்துவம்<br>IV. மனித வள நிபுணத்துவம்<br>V. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் | செயற்திட்ட முகாமைத்துவ குழுவிற்கு செயற்திட்டத்தின் வெற்றிக்காக மதியுரையாளர்களிடையே முறையான இணைப்பொன்று காணப்பட வேண்டியதுடன், கணக்காய்வுக்காக கோரப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கண்காணிப்பு சட்டகத்தினை நவீனமயப்படுத்துவதற்கான மதியுரை கம்பனி<br><br>செயல்பாட்டின் தன்மைக்கு ஏற்ப பெறுகை நிறுவனங்களுடன் ஓரளவு இடைத்தொடர்பு காணப்பட்டது. எவ்வாறான போதிலும், இருவரும் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு ஒரே தடவையில் சேவையை வழங்கினாலும், மனிதவள நிபுணர்கள் செயற்பாட்டிலுள்ள நிபுணர்களுடன் கலந்துரையாடியிருந்தனர். |
| (ஏ) | மனிதவள மதியுரையாளருக்கு சாட்டப்பட்டுள்ள பணிகளுக்கமைய, மதியுரையாளரின் மதியுரையாளரின் பணியை நிறைவேற்றும் போது சேவை பெறுநரின் எதிர்கால வளர்ச்சி தொடர்பில் கருத்தினை பெற்றுக்கொள்வதற்காக மதியுரையாளரால் செயற்திட்டத்தின் கீழ் வாடகைக்கு எடுத்த ஏனைய மதியுரையாளர்களுடன் தொடர்புபட வேண்டிய இறுதிப் பணியாகும்.செயற்திட்ட செயன்முன்னேற்றத்திற்கமைய செயற்பாட்டு மதியுரையாளர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர். மனிதவள மதியுரையாளருக்கு இந்த செயற்திட்டத்தின் ஏனைய மதியுரையாளர்களை இணைப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் இயலும் என்பதற்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. அதனால் மதியுரையாளர்களிடையே முறையான இணைப்பொன்று மற்றும் தொடர்பாடலொன்று இல்லாதிருந்த காரணத்தால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | மனிதவள நிபுணர்களின் உத்தேச பகிர்ந்தளிப்புகள் அவர்களின் ஒப்பந்தக் காலத்தினுள் உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு மதியுரையாளர்களை தவர்ந்த ஏனைய மதியுரையாளர்கள் காணப்படாத காரணத்தால், அவருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஏனைய அனைத்து நிபுணர்களின் குறிப்பு விதிமுறைகள் மற்றும் அவரின் மனிதவள ஒப்படைப்பில் தேவைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அவரின் அனைத்து அறிக்கைகளும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவர் அனைத்து ஆணைக்குழு அங்கத்தவர்களுடன் குழுவாகவும் தனியாகவும் பல்வேறு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் மனிதவள துணைக் குழுவில் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு சட்டகத்தினை நவீனமயப்படுத்துவதற்காக மதியுரை கம்பனியை ஆட்சேர்ப்பதற்காக பெறுகை நடைமுறை தொடர்ச்சியாக காணப்பட்டதாக உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படவில்லை. 2021 ஒக்தோபர் 27 ஆந் திகதிய CPCC கூட்ட உறுப்புரைக்கமைய நிதி முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி மதியுரையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும், ஒப்பந்தம் இதுவரையிலும் கையளிக்கப்படவில்லை. மேலும், மேற்படி கட்டம் வரையிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் இந்த பெறுகைக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உலக வங்கியிலிருந்து எதுவித எதிர்ப்பும் காணப்படாமையின் அடிப்படையில், பிரயிஸ் வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் (தனியார்) கம்பனிக்கு கையளிப்பதற்கான கட்டம் வரையிலும் விலைக்கேள்வி கையளிக்கும் நடைமுறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் உலக வங்கிஅ து தொடர்பில் எதுவித எதிர்ப்பினையும் தெரிவித்திருக்கவில்லை. எவ்வாறான போதிலும், செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், முன்னோக்கி செல்ல முடியாதிருந்தது. ஊடக அறிவிப்பு மேற்கொள்வதற்கான கிரயம் FSMP செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் முன் அங்கிகாரம் இன்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் சம்பளம் மற்றும் பணிநிலை விபரங்களை அதிகரிப்பதையும் அனைத்து அமைச்சுக்களும் ஏனைய சம்மந்தப்பட்ட அதிகார சபைகளும் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தி இருந்தது. எவ்வாறாயினும், | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 2005 ஆம் ஆண்டின் போது பிணைங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சில ஊழியர்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு இரட்டை நிலை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். 2005 ஆம் ஆண்டு முதல் பதவிநிலைகள், சம்பள படிமுறைகள் மற்றும் ஏனைய ஊதியங்கள் ஆகியவை தனியாகவே திட்டமிடப்பட்டன. நிறுவனத்தின் முதிர்ச்சி மற்றும் பொறுப்புகளின் விரிவாக்கத்தின் காரணமாக பதவிநிலைகள் மற்றும் சம்பளங்களை | ஆணைக்குழுவின் மனித வள செயற்பாடுகளுக்கு அந்தந்த உயர் அதிகார பீடங்களால் வழங்கப்பட்ட பொருந்தக் கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை ஆணைக்குழு பின்பற்ற வேண்டும். |

ஆணைக்குழுவானது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பணிநிலைகள், பதவி உயர்வுகள் மற்றும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

மீளமைத்தல் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை அமுல்படுத்தும் தேவை ஏற்பட்டது. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் நிறைவேற்று உத்தியோகத்தரிலிருந்து சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் வரையான பதவியுயர்வு (பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் பின்பற்றப்பட்டது) நீங்கலாக, வேறு எந்த பதவியுயர்வு திட்டங்களும் காணப்படவில்லை. இதன் காரணமாக ஊழியர்கள் ஒரே பதவியில் நீண்ட காலம் தேக்கமடைந்து மற்றும் ஊழியர்களின் சுழற்சி மிக அதிகமாக (2005 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அண்ணளவாக 50% ஊழியர்கள் பதவி நீங்கிச் சென்றிருந்தனர்) இருந்தது. காப்புறுதி தொழிற்துறை பிரமாணங்களின் 5(e), 10(1) மற்றும் 10(2) ஆம் பிரிவின் படி, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதன் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமானதாக கருதப்படும் அத்தகைய அதிகாரிகளை நியமிக்கவும் அத்தகைய அதிகாரிகளுக்கு அத்தகைய முறை மற்றும் அத்தகைய விகிதங்களில் ஊதியம் வழங்கவும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. பாராளுமன்றத்தால் ஆணைக்குழுவின் மீது அளிக்கப்பட்டுள்ள அவ்வாறான அதிகாரங்களைப் பின்பற்றி ஆணைக்குழு செயற்பட்டுள்ளது. இதன்படி, மூன்று ஆணைக்குழு உறுப்பினர்களைக் கொண்ட ஊதியக் குழு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டது. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் 03/07/2018 ஆந் திகதிய 183/47 ஆம் இலக்க தாளில் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அவை அங்கிகரிக்கப்பட்டன. 2019 யூன் 30 ஆம் திகதியன்று ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட அதன் காலாண்டு பணிநிலை விபர தகவல் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இந்த மாற்றங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரம் இன்றி ஆணைக்குழுவால் பதின்மூன்று (13) பதவி நிலைகள் அதிகரிக்கப்பட்டன. | சபை அல்லது ஆணைக்குழு தொடக்கத்தில் இருந்து நிறைவேற்றுப் பதவிகளுக்கான சிரேஸ்ட நிறைவேற்றுப் பதவிகளைத் தவிர எந்த பதவி உயர்வுத் திட்டமும் இருக்கவில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு மேலே குறிப்பிட்ட படி பதவிகளை மீண்டும் நியமித்துள்ளது மற்றும் இதன் காரணமாக ஊழியர்கள் ஒரே பதவியில் நீண்ட காலம் தேக்கமடைந்து உள்ளனர்.<br>பதவிகள் மறு நியமனம் செய்யப்பட்டதன் காரணமாக மொத்த பணிநிலை விபர எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை. பீஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | ஆணைக்குழுவின் மனித வள செயல்பாடுகளுக்கு ஆணைக்குழு அந்தந்த உயர் அதிகார பீடங்களிடமிருந்து முன் அனுமதியைப் பெற வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஆணைக்குழுவால் நாற்பத்து ஒன்பது (49) ஊழியர்கள் பணி அமர்த்தப்பட்டனர். இந்த பதவிகளில் இருந்து ஒரு (01) பணிப்பாளர், பதின்மூன்று (13) முகாமையாளர் / உதவி முகாமையாளர்கள் மற்றும் ஒரு (01) செயலாளர் பதவி ஆகியன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கிகரிக்கப்படவில்லை. | ஆணைக்குழு 57 பதவிகளுக்காக நிதி அமைச்சிடம் இருந்து அங்கிகாரம் பெற்றுள்ளது. முகாமையாளர் அல்லது உதவி முகாமையாளர் பதவிகளானது நிறைவேற்றுப் பதவிக்கான பதவி உயர்வு தரங்களாக மட்டுமே இருக்கிறது அத்துடன் இதனால் மொத்த பணிநிலை விபரங்களுக்கு எந்த விளைவும் இல்லை. அனைத்து பதவி நிலைகளும் அமைச்சின் அங்கிகாரத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டன.<br>புதிய பதவி நிலைகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன் ஒப்புதல் - பின்னிணைப்பு 14 பெறப்பட்டது. பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | ஆணைக்குழுவின் மனித வள செயற்பாடுகளுக்கு அந்தந்த உயர் அதிகார பீடங்களால் வழங்கப்பட்ட பொருந்தக் கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை ஆணைக்குழு பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் ஆணைக்குழு தமது சொந்த பதவிநிலை விபரம் மற்றும் சம்பளத் திட்டத்தை தீர்மானித்திருந்தது. 2019 மே 31 ஆந் திகதிய குறிப்பின் மூலம் பணிப்பாளர் நாயகத்தினால் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம், பணிநிலை விபர திருத்தம், ரூபா. 7,800 | இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊதியம் தொடர்பான குழு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டது, கடந்த 13 ஆண்டுகளாக 2012 இல் ஒரே ஒரு சம்பளத் திருத்தம் மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே ஊழியர்களின் சம்பளம் சந்தை விகிதங்களுடன் குறிப்பாக மற்ற நிதித் துறை கட்டுப்பாட்டாளர்கள் வழங்கும் ஊதியத்துடன் ஒப்பிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை காப்புறுதி | ஆணைக்குழு அவர்களின் பதவிகளின் பணிநிலை விபரம் மற்றும் ஊதியக் கட்டமைப்பிற்கு நிதி அமைச்சிடம் இருந்து ஒப்புதல் பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான வாழ்க்கைச் செலவினப் படிகள், அடிப்படை சம்பளத்தில் இருந்து 15% திறன் கொடுப்பனவு படி மற்றும் ரூபா. 12,500 தொகையான விசேட வாழ்க்கைப் படி ஆகியவற்றுக்கு 2018 யூலை 01 ஆந் திகதி முதல் தலைவரின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு நிதி அமைச்சின் வரம்புக்கு உட்பட்ட ஒரு நிறுவனமாக இருந்தாலும், ஆணைக்குழு அவர்களின் பணிநிலை விபரம் மற்றும் சம்பளம் மற்றும் படிகளின் அதிகரிப்பு என்பவற்றைத் தீர்மானிக்க பொதுத் திறைசேரியிடம் இருந்து அனுமதி அல்லது ஒப்புதலைப் பெற்று இருக்கவில்லை. | ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்த முடியாது போயுள்ளது மற்றும் தற்போது உள்ள தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களைத் தக்கவைத்து காப்புறுதித் துறையில் எப்போதும் அதிகரித்து வரும் சிக்கலான சவால்கள் மற்றும் மேலும் விசாரணைகள் இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் போன்றவற்றின் பின்னணியினையும் எதிர் கொள்ளவும் முடியாது போயுள்ளது. கட்டுப்பாட்டாளரின் விளைதிறன், வினைத்திறன் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்த சர்வதேச காப்புறுதி நடைமுறைகளுக்கு ஏற்ப தற்போதைய கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. மேலும், மற்ற கட்டுப்பாட்டாளர்களைப் போலவே நல்ல இழப்பீட்டுத் தொகுப்பைக் கொண்டிருப்பது தொடர்பான பின்வரும் உண்மைகளை முன்னிலைப்படுத்த விரும்புகிறோம். இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்புக்களும் புகழ் பெற்ற நிறுவனங்களின் முந்தைய அனுபவத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் அனைத்து நிறைவேற்று மற்றும் அதற்கு மேற்பட்ட ஊழியர்களும் தகுந்த தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, சட்ட மன்றம் தான் நிறுவிய நிறுவனத்திற்கு குறிப்பிட்ட சுய அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. பின்னிணைப்பு 13 – சட்டமா அதிபரின் கருத்து இணைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் உடைய மொத்த வருமானத்தில் சம்பளக் கூறு 24% ஆகும். பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | |
| (உ) | 2018 யூலை 18 ஆந் திகதி இடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் | ஊதியக் குழுவின் ஆய்வின் அடிப்படையிலும் மற்றும் ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடனான | பணிநிலை விபரம் மற்றும் கொடுப்பனவுக் கட்டமைப்பை மாற்றி |

| | | | |
|---|---|---|---|
| | 03/2018 க்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் சம்பளம் 12.98% முதல் 59.73% வரை அதிகரித்துள்ளது. சபையிலுள்ள திறைசேரிப் பிரதிநிதி இது தொடர்பில் சபைக்கு தனது சுயாதீனமாக கருத்தைக் கொண்டுவந்து பொது நலனைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. | அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் சம்பளத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. சட்டமா அதிபரின் கருத்து ஆணைக்குழு எடுத்த சட்ட நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது. ஊதியக் கட்டமைப்பை மாற்றி அமைக்கும் முடிவுடன் ஆணைக்குழு ஏகமனதாக உடன்பட்டது. ஆணைக்குழுவின் உடைய மொத்த வருமானத்தில் சம்பளக் கூறு 24% ஆகும். பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | அமைப்பதற்காக ஆணைக்குழு நிதி அமைச்சிடம் இருந்து முன் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். |
| (ஊ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து ஒரு செயல்திறன் ஊக்கத் தொகை பொதுத் திறைசேரியின் அனுமதி இன்றி செலுத்தப்பட்டு இருந்தது. | தற்போதுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறையானது பல்வேறு செயல்திறன் மதிப்பீட்டு முறைகளை ஆய்வு செய்து மற்றும் ஒரு ஊழியரின் செயல்திறன் தொடர்பான பல அம்சங்களை உள்ளடக்கிய பின்னர் செயல்படுத்தப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக ஆணைக்குழு செயல்படுத்திய செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் திட்டத்திற்கு அமைச்சு எந்த ஆட்சேபனையும் தெரிவித்து இருக்கவில்லை. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது செயல்திறன் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் அதற்கு செய்யப்பட்ட அனைத்து திருத்தங்களையும் அவ்வப்போது நிதி அமைச்சிடம் பகிர்ந்து கொண்டுள்ளது. இருப்பினும், பிஈடி 01/2021 இன் அடிப்படையில் செயல்படும். | செயல்திறன் ஊக்கத் தொகை திட்டத்திற்காக ஆணைக்குழு பொதுத் திறைசேரியிடம் இருந்து முன் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். |
| (எ) | பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் குறித்த மதிப்பீடு தலைவரால் மேற்கொள்ளப்பட்டது. இது ஆணைக்குழுவில் உள்ள இரண்டு சக்தி வாய்ந்த பதவிகளுக்கு இடையே கூட்டுச் சதிக்கு வழி வகுக்கும் மற்றும் சாதகமற்ற | பணிப்பாளர் நாயகத்தின் அண்மிய கண்காணிப்பாளராக மேற்குறிப்பிட்டவாறு, மதிப்பீட்டாளராக பணிப்பாளர் நாயகத்தின் பணிகள் தொடர்பான தலைவருக்கு நேரடியாக அறிவிக்கப்படும். மனிதவள ஆலோசகரால் மதிப்பீட்டாளர் மற்றும் மதிப்பீடு செய்யப்படுபவரால் நேருக்கு நேரான மதிப்பீடு | பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவிற்கு பொறுப்பானவர் ஆவார் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் நல்லாளுகைக் கொள்கையின் படி ஒட்டு மொத்த |

| | | | |
|---|---|---|---|
| | முடிவுகளை எடுக்க வழி வகுக்கும். மேலும், ஆணைக்குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளது. ஆகவே, பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் ஆணைக்குழுவினால் மதிப்பிடப்படும் என்பது சிறந்த நடைமுறை ஆகும். | பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | ஊக்கத் தொகை கொடுப்பனவானது ஊழியர் மதிப்பெண்ணுடன் நேரடியாக பொருந்தி இருக்கவும் இல்லை மற்றும் அளவிடப்பட்டு இருக்கவும் இல்லை. பெறப்பட்ட மதிப்பெண் வரம்பைப் பொறுத்து அது செலுத்தப்படுகிறது. இது ஊழியர் பகுதியின் மீதான இழைக்கப்படும் ஒரு அநீதியாகும். உதாரணமாக, 81 மதிப்பெண் பெற்ற ஒரு ஊழியரும் 100 மதிப்பெண் பெற்ற ஒரு ஊழியரும் ஊக்கத் தொகை செலுத்தும் போது சமமாக கருதப்பட்டு இருந்தனர். | ஊக்கத் தொகை கொடுப்பனவானது 4 வகைகளில் மதிப்பெண் வரம்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிக மதிப்பெண் வரம்பு பெற்ற ஊழியர்களுக்கு 100% செயல்திறன் ஊக்கத் தொகை கிடைக்கும். பொதுவாக, 80% மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும் மற்றும் 40% க்கு குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மோசமான தேர்ச்சி பெற்றவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இந்த மதிப்பீட்டிலும் அதே எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.<br>நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இன் மனித வள ஆலோசகரின் ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் ஒரு புதிய ஊக்குவிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம். இதன் படி, ஊக்குவிப்பு கொடுப்பனவு தனிப்பட்ட புத்திசாலித்தன நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது மற்றும் அவர்களின் சாதனையின் அடிப்படையில் கொடுப்பனவு ஒன்றுக்கு ஒன்று மாறுபடும். | ஊக்கத் தொகையானது ஊழியரின் தனிப்பட்ட மதிப்பெண்ணுடன் நேரடியாகப் பொருந்த வேண்டும். |
| (ஐ) | பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் மதிப்பீட்டு படிவம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல்திறன் மதிப்பீட்டு படிவங்கள் தனிப்பட்ட கோப்புக்களில் தாக்கல் செய்யப்படுகின்றன மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் உடைய கோப்பு தலைவரின் பாதுகாப்பில் வைக்கப்படுகிறது. கணக்காய்விற்கு பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட கோவைகள் மற்றும் செயலாற்றல் மதிப்பீடு கிடைக்காமை ஆகியவை | கணக்காய்வினால் கோரப்பட்ட தகவல்கள் உரிய காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | DFA அல்லது DG இற்கு அறிவிக்கப்பட்டிராததுடன், அவர்கள் அவற்றை கணக்காய்வுக்கு வழங்குவதற்கு சாத்தியம் காணப்பட்டது. அவை கிடைக்காதிருந்தமை தொடர்பில் பின்னிணைப்பில் காணப்பட்ட கடிதத்தில் மூலமாகவே தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. | |
| (ஒ) | அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புக்களில் பணிப் பட்டியல்கள் கிடைப்பனவு அற்றதாக காணப்படுகிறது. ஆகவே, முக்கிய செயல்பாட்டு குறிகாட்டிகள் (KFIs) எவ்வாறு உருவாக்கப்பட்டன மற்றும் செயல்திறனை மதிப்பிடுகின்றன என்பது தெளிவாக இல்லை. | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளானது (KPIs) ஊழியர்களின் வேலை விபரணங்கள் (JDs) போன்ற முக்கிய முடிவுகள் பகுதிகளுக்கு (KRAs) எதிராக அமைக்கப்பட்ட செயல்கள் அல்லது செயல்பாடுகளின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டு தோறும் முக்கிய முடிவுகள் பகுதிகள் (KRAs) அமைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், மனித வள ஆலோசகர் இலக்கு நிறுவனத்திற்கான வேலை விபரணங்களை வரைந்துள்ளனர் மற்றும் அதே அடிப்படையில் புதிய வேலை விபரணங்கள் ஊழியர்களுக்கு வழங்கப்படும். | ஆணைக்குழுவில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கு வேலை விபரணங்கள் இருக்க வேண்டும் மற்றும் அந்த தகவல் அவர்களின் செல்திறன் மதிப்பீடுகளில் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | இந்த திட்டமானது ஒரு (01) மாத அடிப்படைச் சம்பளத்தின் ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு முதல் பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் இன்றி ஒன்றரை மாத (1½) மொத்த சம்பளமாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக, மொத்த ஊக்குவிப்புத் தொகை ரூபா. 4,605,381 ஆல் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 105% அதிகமாகும். | ஆணைக்குழு அதன் 195 ஆம் கூட்டத்தின போது இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதவியணியின் செயலாற்றலினை அடிப்படையாக கொண்டு ஆகக் கூடியது 1.5 மாத மொத்த சம்பளத்திலிருந்து செலுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஊக்கத் தொகை திட்டத்தில் மாற்றங்கள் பொது திறைசேரியின் அங்கிகாரத்தின் படி செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | அனைத்து ஊழியர்களும் இறுதி மதிப்பீட்டில் 100% மதிப்பெண்கள் | தற்போதுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறையின் படி, செயல்திறன் அளவுகோல் மதிப்பெண்களானது | ஒரு யதார்த்தமான செயல்திறன் மதிப்பீட்டு முறையை |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுள்ளனர். ஆகவே, உண்மையான செயல்திறன் மதிப்பீடு ஆணைக்குழுவினால் மேற்க்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. | திட்டமிடப்பட்ட முக்கிய செயல்பாடுகள், முக்கிய செயல்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் முக்கிய நடத்தை குறிகாட்டிகள் ஆகியவற்றின் கலவையாகும். மதிப்பெண்கள் வரம்பு 80-100 வெகுமதி அளவு 100 இன் கீழ் வரும். 2020 ற்காக ஊழியர்கள் வெவ்வேறு செயல்திறன் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். முந்தைய ஆண்டுகளில் சிலர் 80 ற்கும் குறைவான செயல்திறன் அளவுகோல் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். எனவே ‘‘செயலாற்றலானது யதார்த்தபூர்வமான செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புலப்படவில்லை’’ எனும் கருத்துரையை ஏற்றுக்கொள்ள முடியாது. | ஆணைக்குழு அமுல்படுத்த வேண்டும். |
| (க) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.14.2 இன் படி, தயாரிக்கப்பட்ட நடைமுறைகளின் கையேடு சபையினால் அங்கிகரிக்கப்பட வேண்டும் அதன் பிறகு திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக பொது திறைசேரியின் செயலாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் நிர்வாக கையேடு பொது திறைசேரியால் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆகவே, விடுமுறை பணமாக்குதல் கொடுப்பனவு ரூபா. 1,639,753 ஆனது முறையான அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது அவதானிக்கப்பட்டது. | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் விடுமுறை பணமாக்குதல் கொடுப்பனவை உள்ளடக்கிய நிர்வாகக் கையேடு நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆரம்ப கையேடு 2012 ஒக்தோபர் 23 அன்று அமைச்சிற்கு அனுப்பப்பட்டது மற்றும் அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டது. பின்னர் கையேட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. 2018 ஏப்ரல் 05 அன்று, பொது முயற்சிகள் திணைக்களமானது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் சிக்கல்கள் காரணமாக நிர்வாக கையேடுகளுக்கு அனுமதி வழங்கும் செயல்முறையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழுவிற்கு தெரிவித்தது. எனவே நிர்வாக கையேட்டில் உள்ள ஏற்பாடுகளை ஆணைக்குழு ஏற்றுக் கொண்டது. | ஆணைக்குழுவிற்காக செயல்வழிக் கையேட்டினை தயாரிக்கும் போது ஆணைக்குழுவினால் முறையான செயல்நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆகஸ்ட் ஆலோசகர்களை தெரிவு செய்தல் மற்றும் பணிக்கு அமர்த்துதல் வழிகாட்டுதலின் படி, 2019 செப்தம்பர் 19 அன்று பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் (CAO) நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களத்தால் (CPCD) பொது நடைமுறையில் கணக்காய்வு நிறுவனத்திடம் இருந்து உள்ளக கணக்காய்வு சேவையை பெறுகை செய்யப்பட்டது. ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களம் (CPCD) இன் நான்கு உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தின் முக்கிய ஊழியர்களை உள்ளடக்கி இருந்ததால் அவர்களின் விவகாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரின் ஆதிக்க வரம்பின் கீழ் இருந்ததால் நியமனத்தின் சுதந்திரம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே, ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. எனவே, உள்ளக கணக்காய்வாளரின் சுதந்திரமும் புறநிலையும் பாதிக்கப்படலாம். | வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களம் (CPCD) நியமிக்கப்பட்டுள்ளது.<br>எவ்வாயாயினும், கணக்காய்வு வழங்கிய கருத்துக்களின் பார்வையில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதே போன்று ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெற்று 2022 முதல் 2024 வரையான ஆண்டுகளுக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க ஆணைக்குழு ஏற்பாடு செய்யும். | உள்ளக கணக்காய்வாளரைத் தெரிவு செய்யும் போது ஒரு சுயாதீனமான மற்றும் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது உள்ளக கணக்காய்வாளருக்கான அறிக்கையிடும் அடுக்கு நிகழ்வு மற்றும் அறிக்கையிடல் நேர இலக்குகள் வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பு விதிமுறைகள் (TOR) ஆனது கணக்காய்வுத் திட்டம் அல்லது வேலை அட்டவணையைக் கோரி இருக்கிறது. மற்றும் தேர்வு அளவுகோலின் ஒரு பகுதியாக இருக்கும். | ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது செயல்திறன் அளவுகோல்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என்பதுடன், உள்ளக கண்காய்வாளரின் செயலாற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்காய்வினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரை 40(3) மற்றும் நிதி பிரமாணங்கள் 134 (1) என்பவற்றின் படி, உள்ளக கணக்காய்வாளர் நேரடியாகத் தலைவர் அல்லது ஆளும் குழுவிற்கு அறிக்கையிட வேண்டும். எவ்வாறாயினும், பொருந்தக் கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி பொறுப்புக்களை அறிக்கை இடுவதற்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கவில்லை. மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு மாறாக 2019 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 2021 யூலை 06 அன்று பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளக கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உள்ளக கணக்காய்வாளர்களிடம் நாம் கோரியுள்ளோம். | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 2022 ஒக்தோபர் 20 வரை கிடைக்கவில்லை. எனவே, ஆணைக்குழுவிற்கான அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு சரியான நேரத்தில் நடவடிக்கைகள் எடுப்பது சாத்தியமில்லை. மேலும், வெளியக கணக்காய்வாளரின் பணிகளைத் திட்டமிடும் போதும் மற்றும் செயல்படுத்தும் போதும் உள்ளக கணக்காய்வாளரின் வேலையை வெளியக கணக்காய்வாளரினால் பயன்படுத்த முடியாது இருக்கும். | 2020 ஆம் ஆண்டுக்கான அறிக்கை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 2022 பெப்ரவரி மாதத்தில் கிடைத்துள்ளது. அதன் பிரதியொன்று தாங்களுக்கு துரிதமாக வழங்கப்படும். 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. 2019 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு அறிக்கை 2021-07-30 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. 2021-11-10 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பின்தொடர் நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. கணக்காய்வு குழுவின் பரிந்துரைகளுடனான அறிக்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடப்பட்ட போது வெளிவாரி கணக்காய்வாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகை தந்துள்ளார். | |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக் குழுவின் அழைப்பாளர் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஆவார். 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசிற்கு சொந்ததான முயற்சிகளுக்காக நிறுவன நிர்வாகத்திற்கான வழிகாட்டியில் 4.2 ஆம் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியொருவர் கணக்காய்வுக் குழுவிற்கு நாள்தோறும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வுக் குழுக் கூட்டமானது மதியுரை செயற்பாட்டாளர் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கே ஆகும். 2020 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு மிகவும் துரிதமாக கணக்காய்வுக் குழு கூட்டமொன்றை நடாத்துவதற்கு நாம் திட்டமிட்டிருந்தோம். தலைவரின் இராஜிநாமா காரணமாக கணக்காய்வு குழு இந்த வருடத்தில் மீளமைக்கப்பட்டது என்பதை தாழ்மையுடன் கவனத்திற் கொள்க. | கணக்காய்வு குழுக் கூட்டங்கள் உரிய வழிகாட்டல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கமைய உரிய நேரத்தில் நடாத்தப்பட வேண்டும். |